பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

# காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(14.09.2022 முதல் 18.09.2022 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 073 (09) PJN/GKMS/2022 தேதி: 13.09.2022

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (08.09.2022 முதல் 12.09.2022 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -18.09.2022 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 08/09 | 09/09 | 10/09 | 11/09 | 12/09 | | நாள்-1 14/09 | நாள்-2 15/09 | நாள்-3 16/09 | நாள்-4 17/09 | நாள்-5 18/09 |
| 6.0 | 6.0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 3 | 6 | 0 | 3 | 3 |
| 33 | 33 | 34 | 34 | 34 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 34 | 34 | 34 | 34 | 34 |
| 25 | 25 | 25 | 25 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 25 | 25 | 25 | 25 | 25 |
| 4 | 4 | 4 | 3 | 2 | மேக மூட்டம் | 4 | 6 | 6 | 4 | 4 |
| 61-85 | 61-85 | 53-81 | 61-81 | 56-80 | ஈரப்பதம் (%) | 70-80 | 70-80 | 70-80 | 70-80 | 70-80 |
| 4 | 4 | 5 | 5 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 14 | 14 | 12 | 12 | 12 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு |

## எதிர்பார்க்கப்படும் வானிலை (14.09.2022 முதல் 18.09.2022 வரை):

- செப்டம்பர் 14,15, 17 மற்றும் 18 தேதிகளில் ஒரிரு இடங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- செப்டம்பர் 14 மற்றும் 15 தேதிகளில் இடியுடன் மின்னல் ஓரிரு இடங்களில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 25-34 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் மணிக்கு 12-14 கி .மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள்/ கால்நடைகள் | நிலைகள் / விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | நிலம் தயாரித்தல் | வெள்ளநீர் தேங்காமல் இருக்க நேரடி விதைப்பு அல்லது நடவிற்கு முன்னரே சீரிய வடிகால் வசதி அமைக்கவும். |
| | விதைத்தல் | செப்டம்பர் 30 வரை நேரடி நெல் விதைப்பை மேற்கொள்ளலாம். |
| | உரமிடுதல் | சம்பா நெற்பயிருக்கு, நடவிற்கு முன்பு ஒரு ஹெக்டருக்கு அடி உரமாக யூரியா 37 கிலோ, டிஏபி 100 கிலோ, பொட்டாஷ் 25 கிலோ, ஜிங் சல்பேட் 25 கிலோ மற்றும் ஜிப்சம் 500 கிலோ இடவும். |

| | | |
|---|---|---|
| | | **சேற்று வயல் நேரடி விதைப்பில்** 50 கிலோ மணிச்சத்தை அடியுரமாக இட வேண்டும். பின்பு நிலத்தை சமன் படுத்தி, அரை அடி அகலத்தில் சிறிய வடிகால் வாய்க்கால்கள் நிலத்தின் குறுக்கேயும், 3 மீ இடைவெளியிலும், வரப்பின் ஓரத்திலும் அமைப்பதனாலும் கன மழை ஏற்படும் போது அதிக நீரை வடிகட்டி ஆரம்ப வளர்ச்சி நிலையில் உள்ள நெற் பயிரை பாதுகாக்கலாம். |
| | **களை மேலாண்மை** | **நாற்றங்காலில்** களையைக் கட்டுப்படுத்த விதைத்த மூன்றாம் அல்லது நான்காம் நாளில், களை முளைப்பிற்கு முந்திய களைக்கொல்லியான பூட்டாக்ளோர் 160 மிலி என்ற அளவில் விதைத்த 8 நாட்களுக்கு பிறகு களைக்கொல்லியைப் பயன்படுத்தவும். |
| | | **நேரடி சேற்று விதைப்பு** நெல்லில், களை மேலாண்மைக்கு ஹெக்டருக்கு பைரசோஸல்ப்யூரான் ஈதைல் (pyrazosullfuron ethyl) 200 கிராம் என்ற அளவில் விதை விதைத்து 3-5 நாட்களில் தெளிக்க வேண்டும். |
| | | **நேரடி புழுதி விதைப்பு** நெல்லில், களை மேலாண்மைக்கு ஹெக்டருக்கு பென்டிமிதலின் (pendimethalin) 3.3 லிட்டர் என்ற அளவில் விதை விதைத்து 3 நாட்களில் தெளிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து பிஸ்பிரிபாக் சோடியம் (Bispyripac sodium) 200 கிராம் விதைத்த 20 நாட்களில் பயன்படுத்தவும். அதன் பிறகு கைக்களை 40 நாட்களில் மேற்கொண்டு களைகளைக் கட்டுப்படுத்தலாம். |
| கால்நடை | **ஊட்டமேற்றிய வைக்கோல்** | மழைக்காலங்களில் கால்நடைகளுக்கு வைக்கோலை யூரியா சத்தூட்டப்பட்டதாக மாற்றி வைத்து குளிர்காலம் முடியும் வரையும் தீவனமாக பயன்படுத்தலாம். (இதற்கு 100 கிலோ வைக்கோலை பாலித்தீன் சாக்குகளில் மேல் பரப்பி பின் 4 கிலோ யூரியாவை 65 லிட்டர் தண்ணீரில் கலந்து வைக்கோலின் மீது தெளிக்க வேண்டும். பின் காற்று புகாமல் அடைத்து 21 நாட்கள் கழித்து எடுத்து தீவனமாக பயன்படுத்தலாம்.) |
| | **தடுப்பூசி செலுத்துதல்** | கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்களுக்கு மழைக்காலம் தொடங்கும் முன்னர் தடுப்பூசிகளைப் போட வேண்டும். |
| | **குடற்புழு நீக்கம்** | குளம், குட்டைகளில் தண்ணீர் குடிக்கும் மாடுகளுக்கும் அவற்றைச் சுற்றி மேயும் மாடுகளுக்கும் தட்டைப் புழுவிற்கான குடற்புழு நீக்க மருந்தினைப் கொடுக்க வேண்டும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த சில தினங்களில் லேசான மழையே எதிர்பார்க்கப்படுவதால், நெற் பயிருக்கான நிலத்தை தயார் செய்யலாம்.

**முதல்வர்**